## சிலிண்டருக்காக மக்களை தெருவில் நிற்கவைத்த ஒன்றிய அரசு!

# பா.ஜ.க.வின் 12 ஆண்டு கால ஆட்சி சுதந்திர இந்தியாவின் இருண்ட காலம்!

## மாநிலங்களவையில் டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு பேச்சு!



புதுடெல்லி, மார்ச் 19 –

மாநிலங்களவையில் தாக்கல் செய்யப்பட்ட செலவின மசோதா மீதான விவாதத்தில் கலந்துகொண்டு தி.மு.க. எம்.பி., டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு பேசியதாவது:

கடந்த 12 ஆண்டுகளாக பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையிலான இந்த பி.ஜே.பி. ஆட்சியில் சமூக ரீதியாக மக்களைப் பிளவுபடுத்தி, ஜனநாயகத்தை பலவீனப்படுத்தி, பொருளாதார சிக்கலுக்கு காரணமாகி இந்த நாட்டை பின்னோக்கி அழைத்துச் சென்றதன் மூலம் சுதந்திர இந்தியாவில் இந்த 2014–2026 காலகட்டத்தை நம் நாட்டின் இருண்ட காலம் என்று அழைக்கலாம். அந்தளவுக்கு சமூக நீதியை, ஜனநாயக மாண்புகளை, கூட்டாட்சித் தத்துவத்தை படுகொலை செய்திருக்கிறது இந்த அரசு.

மேற்கு ஆசியாவில் தற்போது நிலவும் போர் சூழல் காரணமாக உலக அளவில் எரிபொருள் மற்றும் எரிவாயு பற்றாக்குறை நிலவுகிறது. இந்தியாவும் இதில் தப்பவில்லை. ஈரான் மீது இஸ்ரேல் போர் தொடுக்கும் ஓரிரு நாட்களுக்கு முன்பாக நமது பிரதமர் இஸ்ரேலுக்குப் பயணமானதன் ரகசியம் என்ன? அதுபோல, நமது நட்பு நாடுகள் குறைந்த விலைக்கு எரிபொருள் தரத் தயாராக இருந்தும் அதிக விலை கொடுத்து அமெரிக்காவிடம் இருந்து எரிபொருளை வாங்குவதன் ரகசியம் என்ன?

பிரதமர் மோடியின் தவறான வெளியுறவுக் கொள்கைகளால் நமது நட்பு நாடுகள் கூட நம்மைவிட்டு விலகிச் சென்றதால்தான், இப்போது எரிபொருள் தட்டுப்பாட்டால் நம் நாடு பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த அரசின் முழுமையான தோல்விக்கு நான் ஐந்து காரணங்களை விளக்கிச் சொல்ல விரும்பிகிறேன்.

### தவறான விவசாயக் கொள்கைகள்!

முதலாவதாக, பணமதிப்பிழப்பு நடவடிக்கை மற்றும் அவசர கதியில் ஆபத்தான வகையில், பின் விளைவுகள் பற்றி யோசிக்காமல் அமல்படுத்தப்பட்ட ஜி.எஸ்.டி. வரி விதிப்பு முறை. சிறு வணிகர்கள் தங்கள் தொழிலை சுதந்திரமாகத் தொடர முடியாத அளவுக்கு இந்த இரண்டு நடவடிக்கைகளும் அவர்களை பாதித்தது. இதன் காரணமாக பொருளாதார வளர்ச்சியும் பாதிக்கப்பட்டது.

விவசாயிகளின் வருமானத்தை இரண்டு மடங்காக உயர்த்துவோம் என்று 2022ல் உரத்த குரலில் சொன்னது இந்த அரசு. ஆனால் இவர்களின் தவறான விவசாயக் கொள்கைகளால் விவசாயிகள் வீழ்ந்ததுதான் மிச்சம். குறைவான ஊதியம் மற்றும் விலைவாசி உயர்வால் கிராமப்புறங்களில் ஒரு நிரந்தரத் தேக்கநிலை உருவானதையும் யாரும் மறுக்க முடியாது.

இரண்டாவது, தன்னாட்சி பெற்ற அரசியல் சட்ட அமைப்புகளை மிரட்டி பலவீனப்படுத்தியது. சி.பி.ஐ., அமலாக்கத்துறை, நீதித்துறை போன்ற சுயமாக இயங்கக்கூடிய அமைப்புகளை தங்கள் அதிகாரத்தின் மூலமாக நேரடியாகவும் மறைமுகமாகவும் மிரட்டி, வளைத்து எதிர்க்கட்சித் தலைவர்கள் மீது பழிவாங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டது இந்த அரசு.

தவறு செய்ததாக இந்த அரசு யார் மீது குற்றம் சாட்டுகிறதோ அவர்கள் பி.ஜே.பி.யில் இணைந்துவிட்டால், அவர்கள் புனிதர்களாக மாறிவிடுவார்கள் என்ற கொள்கையை தங்களது ‘வாஷிங் மெஷின்’ டெக்னாலஜி மூலமாக அமல்படுத்தி வருகிறது இந்த அரசு. இது ஜனநாயகத்தை பலவந்தப்படுத்தும் செயல். அதேபோல பின்னாளில் உச்சநீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்ட தேர்தல் பத்திரம் என்ற பெயரில் மிகப்பெரும் மோசடியை அரங்கேற்றியதும் இந்த அரசுதான்.

### உளவுத்துறை தோல்வியால் உள்நாட்டுப் பாதுகாப்பு கேள்விக்குறி!

மூன்றாவதாக, தவறான வெளியுறவுக் கொள்கை மற்றும் பலவீனமான எல்லை நிர்வாகம். லடாக் போன்ற பகுதிகளில் நமது எல்லைகளை திறம்படப் பாதுகாக்க இந்த அரசு தவறிவிட்டது என்பதை பல நிபுணர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இதனால் சீனாவுடனான உறவு பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த அரசின் தவறான வெளியுறவுக் கொள்கைகளால் நமது அண்டை நாடுகளான நேபாளம், இலங்கை, மியான்மர், மாலத்தீவு மற்றும் வங்க தேசத்தில் நமது ஆளுமையை நாம் இழந்திருக்கிறோம். உளவுத்துறையின் தோல்வியால் ஏற்பட்ட பஹல்காம் போன்ற சம்பவங்களால் நமது உள்நாட்டுப் பாதுகாப்பும் கேள்விக்குறியாகி இருக்கிறது.

நான்காவது, கோவிட் கால மேலாண்மையில் ஏற்பட்ட தோல்வி. 2021ல் கொரோனா இரண்டாவது அலையின்போது மருத்துவமனைகளில் போதிய அளவுக்கு ஆக்ஸிஜன் மற்றும் படுக்கை வசதிகள் இல்லாத அவலநிலையை அவ்வளவு எளிதில் நாம் மறக்க முடியாது.

ஏழ்மை, வேலை வாய்ப்பின்மை உள்ளிட்ட மிக முக்கியமான விஷயங்களில் இந்த அரசு வெளிப்படைத் தன்மையை கடைப்பிடிக்காமல், தவறான புள்ளிவிவரங்களைத் தந்து அல்லது சீலிட்ட கவரை நீதிமன்றத்தில் கொடுத்து பொதுமக்கள் பார்வையிலிருந்து அவற்றை மறைத்தது.

தங்களது தனிமனித இமேஜை காப்பாற்றுவதில் காட்டும் அக்கறையை பொதுமக்களை பாதிக்கும் விஷயங்களில் காட்டுவதில்லை என்று இந்த அரசின் முக்கிய பதவிகளில் உள்ளவர்கள் மீது விமர்சகர்கள் முன்வைக்கும் கருத்தும் கவனிக்கத்தக்கது.

### மதவாதக் கருத்துகளைத் திணிக்கும் பி.ஜே.பி.!

ஐந்தாவது, சமூகத்தை பிளப்பது, மதவாதக் கருத்துக்களைத் திணிப்பது, மத வன்முறையைத் தூண்டுவது. இந்த 12 ஆண்டுகால பி.ஜே.பி. ஆட்சிக் காலத்தில் சிறுபான்மையினருக்கு எதிராக குறிப்பாக கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிராக திட்டமிட்ட குற்றங்கள் அதிகரித்து வருவதாக விமர்சகர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இந்த அரசின் தவறான கொள்கைகளை விமர்சிக்கும் சமூக செயல்பாட்டாளர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் எதிர்க்கட்சியினர் மீது இந்த அரசு அடக்குமுறையைக் கையாள்வதாகவும் விமர்சனங்கள் உள்ளன. சட்டத்தை தங்கள் கையிலெடுத்துக்கொண்டு சந்தேகப்படும் நபர்களின் வீடுகளை, சொத்துக்களை புல்டோஸர் வைத்து தரைமட்டமாக்கும் கலாச்சாரத்தை பி.ஜே.பி. ஆளும் மாநில அரசுகள் அமல்படுத்துவதை இந்த ஒன்றிய அரசு வேடிக்கை பார்க்கிறது.

### மதச்சார்பற்ற முகத்தை சிதைக்கும் பா.ஜ.க.!

இந்தியாவின் மதச்சார்பற்ற முகத்தைச் சிதைக்கும் வகையில் இந்து ராஷ்டிரம் என்ற சொல்லை பல்வேறு வழிகளில் திணிக்க இந்த அரசு முயல்கிறது. இதற்காக கல்வி மற்றும் வரலாறு சம்பந்தப்பட்ட விஷயங்களில் தவறான தகவல்களை இந்த அரசு திணிக்க முயல்வதாகவும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. இவை அனைத்தையும் மக்கள் கவனித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

எனது உரையை முடிக்கும் முன்பாக, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக வள்ளுவர் எழுதியதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**‘நாடொறும் நாடி முறை செய்யா மன்னவன் நாடொறும் நாடு கெடும்’**

அதாவது, தினமும் தன் ஆட்சியை ஆராய்ந்து, நீதியுடன் ஆளாத அரசனின் நாடு நாள்தோறும் மெல்ல மெல்ல அழியும் என வள்ளுவர் கூறுகிறார். அதேபோல வரிக்கு மேல் வரி விதிக்கும் அரசன், கொள்ளையடிப்பவனுக்குச் சமமானவன் என்று வள்ளுவர் சொல்லுகிறார்.

ஆட்சியாளர்களுக்கு பொதுமக்களின் மீது பரிவும் கருணையும் இல்லையெனில் வளம் மிகுந்த நாடும் பயனில்லாமல் போகும். நல்ல அரசு அமையாத நாட்டில் எல்லா வளமும் இருந்தும் எந்தப் பயனும் இல்லை என்பதை இந்த அரசு உணர வேண்டும். வள்ளுவரின் இந்த வார்த்தைகளை மற்ற எவரையும் விட நமது நிதியமைச்சர் நன்றாகவே அறிவார்.

இந்த அரசின் தவறான கொள்கைகளால் குறிப்பாக பணமதிப்பிழப்பு மற்றும் கோவிட் காலங்களில் மக்கள் நீண்ட வரிசையில் தெருக்களில் நிற்பது பி.ஜே.பி. ஆட்சியில் நிரந்தரக் காட்சியாக இருக்கிறது.

இதன் தொடர்ச்சியாக இப்போது, சமையல் எரிவாயுக்காக மக்கள் தெருக்களில் போராடுகிறார்கள். இதுதான் இந்த அரசின் உச்சபட்ச சாதனை என்பதை வேதனையோடு சொல்லி எனது உரையை முடிக்கிறேன்.

இவ்வாறு டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு பேசினார்.

## தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தலைமை!

# சங்கரன்கோவில் தொகுதி தேர்தல் பணிகள் ஆலோசனைக் கூட்டம்!

## முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் – அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் பங்கேற்பு!

தென்காசி. மார்ச் 19 –

தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி 2026 தேர்தல் பணிகள் ஆலோசனை கூட்டம் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள ஜெய் சாந்தி மகாலில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ. ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. மூர்த்தி பாண்டியன் வரவேற்புரையாற்றினார்.

மேலநீலிதநல்லூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் பெரிய துரை நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர்.

இந்நிகழ்வில் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் பேசியதாவது.

தேர்தல் களம் சூடு பிடித்துள்ளது.

### மிகப்பெரிய நம்பிக்கைக்குச் சொந்தக்காரர்! ஓ.பி.எஸ்.!

தமிழகத்தில் முதலமைச்சராக பங்கேற்றவர் பண்பாளர், அம்மாவின் நம்பிக்கையை பெற்று முதல்வர் பதவியை அப்படியே கொடுத்தவர். நம்பிக்கைக்குறியவர், முன்னாள் முதல்வர் நான் சொல்லி தெரிய வேண்டியது இல்லை, மிகப்பெரிய நம்பிக்கைக்கு சொந்தக்காரர் ஓ.பி.எஸ். அவர்கள், அனைவரும் மதிக்கக் கூடிய பண்பாளர்.

மதிப்பிற்குறியவர்களை சரியான நேரத்தில் மதிப்பவர் நம்மளுடைய முதல்வர் தளபதி அவர்கள்.

இன்று அவர்களை மதித்து கட்சியில் இணைத்து தேர்தல் பிரச்சாரத்தின் உரிமையை கொடுத்து என் உட்பட அனைவருக்கும் தொலைபேசியில் சொல்லி சிறப்பான வரவேற்பு கொடுத்து வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது. யார் வேண்டுமானாலும் எந்த கட்சிகளும் சேரலாம் ஆனால் சேரும் இடம் சரியா தவறா என்பது ஓ.பி.எஸ். அவர்கள் நிதானமாக யோசித்து எதை செய்தால் அவர்களை நம்பியவர்களுக்கு எதிர்காலம் இருக்கும், இந்த நாட்டுக்கு எது சரியாக இருக்கும் என்று யோசித்து நமது இயக்கத்தில் இணைந்துள்ளார். இந்தக் கட்சியிலே உழைப்பவர்களுக்கு மரியாதை உழைப்புக்கேற்ற ஊதியம் இருக்கும், உங்கள் உழைப்பு உறுதுணையாக இருக்கும் என உங்களை வரவேற்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் பேசினார்.

பின்னர் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் பேசியதாவது.

உங்களை சந்திக்கும் வாய்ப்பை உருவாக்கித் தந்த நல்ல மனம் படைத்த கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதி அவர்களின் நல் ஆசியோடு ஆணையை ஏற்று இங்கு வந்துள்ளேன். வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் ராமச்சந்திரன் அவர்களையும் வரவேற்கிறேன். சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதி தேர்தல் பணிகளை நடத்த மாவட்டச் செயலாளர் ராஜா எம்.எல்.ஏ. ஏற்பாடு செய்துள்ளார்.

உங்கள் கடமைகளை பணிகளை நான் அறிவேன் இந்த தேர்தலுக்கு இரண்டு ஆண்களுக்கு முன்பே நீங்கள் பணிகளை ஆரம்பித்து விழிப்புடன் செயல்பட்டு வருகிறீர்கள்!

### நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்!

அடிப்படை பணிகள் என்ன, விஞ்ஞான பூர்வமான பணிகள் என்ன, தேர்தல் வாக்குச்சாவடிகளுக்கு செல்லும் பொழுது ஆற்ற வேண்டிய பணிகள் என்ன, வாக்குப்பதிவு என்பது நாம் கடமையுணர்வோடு வாக்காளர்களை அழைத்து சென்று வாக்குப்பதி செய்ய வேண்டிய பணிகள் என்ன என்பதை நீங்கள் எல்லாம் தொகுத்து மனதிலே நிறுத்தி வைத்திருக்கிறீர்கள். நாளை தேர்தல் வந்தாலும் அந்த தேர்தலில் வெல்லக்கூடிய பணிகளை அடிப்படை பணிகளை உணர்வுபூர்வமாக நீங்கள் மனதில் தேக்கி வைத்துக் கொண்டிருக் கிறீர்கள் என்பதை நான் நன்றாக அறிவேன். மகத்தான வெற்றி பெறுவதற்கு நல்ல பல ஆலோசனை வழங்கி கழகத்தை வழிநடத்திச் சென்று கொண்டிருக்கின்ற நம்முடைய தளபதி அவர்களுக்கு நான் நன்றி சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன்.

பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மற்றும் புரட்சித்தலைவி அம்மா, நம் கழகத் தளபதி அவர்கள் ஆகியோர்கள் மக்களின் ஆதரவோடு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர்களாகப் பதவி வகித்தனர். ஆனால், தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி மக்களால் தேர்ந்தெடுக் கப்பட்டவர் அல்ல. 50 ஆண்டு கால அ.தி.மு.க.வை குறுக்கு வழியில் கைப்பற்றி, தன்னை முதலமைச்சராக ஆக்கியவருக்கே அவர் துரோகம் செய்தார். ‘ஊர்ந்து சென்று’ முதலமைச்சர் பதவியைப் பெற்ற அவர், பதவி கிடைத்தவுடன் கொஞ்சமும் நன்றியின்றி துரோகியாக மாறினார்.

### 11 தேர்தல்களிலும் படுதோல்வி!

தனது அடிமைகளை வைத்துக் கொண்டு கட்சியின் பொதுச் செயலாளர் பதவியையும் அபகரித்துக் கொண்டார். அவர் பொறுப்பேற்ற பிறகு நடந்த நாடாளுமன்றம், சட்டமன்றம், உள்ளாட்சி மற்றும் இடைத் தேர்தல்கள் என 11 தேர்தல்களிலும் அ.தி.மு.க.படு தோல்வியையே சந்தித்துள்ளது.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோர் வழியில், ஜாதி, மத பேதமின்றி அனைத்து மக்களுக்கும் சமமான சமூக நீதியை வழங்கும் மிகச் சிறப்பான ஆட்சியை முதலமைச்சர் தளபதி அவர்கள் அளித்து வருகிறார். டெல்லியில் உள்ளவர்கள் (பாஜக) திராவிட இயக்கத்தை அழிக்க நினைத்தாலும், அதைத் தடுத்து நிறுத்தும் ஒரே சக்தியாக கழக தலைவர் முதலமைச்சர் தளபதி அவர்கள் விளங்குகிறார். கடந்த காலங்களில் பின்தங்கியிருந்த தொழில் துறை, ஐடி மற்றும் விவசாயத் துறைகளை முதலமைச்சர் அவர்கள் மீட்டெடுத்துள்ளார். உலக முதலீட்டாளர்களை ஈர்த்து, பல்லாயிரம் கோடி ரூபாய் முதலீடுகளைக் கொண்டு வந்ததன் மூலம் லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் இருந்து சுமார் 2 லட்சம் கோடி ரூபாய் நிதியை ஒன்றிய அரசு வரியாகப் பெறுகிறது. ஆனால், அதனை மீண்டும் மாநிலத்தின் வளர்ச்சிக்குத் திருப்பிக் கொடுப்பதில் ஒன்றிய அரசு கடுமையான பாரபட்சம் காட்டுகிறது. ஒன்றிய அரசு நிதி நெருக்கடி அளித்தாலும், மாநிலத்தின் சொந்த நிதியைக் கொண்டு தொலைநோக்குத் திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார். இதன் விளைவாக, இந்தியாவின் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 11.08 சதவீதமாக உயர்ந்து சாதனை படைத்துள்ளது. பார்த்துப் பார்த்து நம்முடைய தளபதி அவர்கள் அத்தனை திட்டங்களையும் தமிழ்நாட்டு மக்களுக்கு கிடைக்கக்கூடிய பலன்களையும் ஆய்வு செய்து, அது ஒரு கடைக்கோடி மக்கள் வரை போய் சேருகிறதா என்பதை அதிகாரிகள் மூலம் செய்கிறார். மக்கள் பல்வேறு திட்டங்கள் மூலமாக பலன்களை பெறுகின்றனர்.

குடும்பத் தலைவிகளுக்கான ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகை’ திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மாதமும் எவ்வித தடையுமின்றி ரூ.1000 வங்கி கணக்கில் செலுத்தப்படுகிறது. தற்போது ரூபாய் 5000 ம் வங்கிக் கணக்கில் யாருக்கும் தெரியாது. இப்படி முன்னெடுத்து செல்கின்ற அரசை இந்தியாவில் இதுவரை எந்த மாநிலமும் இல்லை.

### வெற்றி மேல் வெற்றி சூரியனுக்கே!

இதுபோன்று செயல்படுத்தப்படவில்லை. அதிகாரிகள் அளவிலான திட்டங்களை முதலமைச்சரே நேரடியாகக் கண்காணித்து செயல்படுத்துகிறார். திருச்சியில் 9 ம் நடைபெற்ற தி.மு.க.வின் மாநாடு, இந்திய அளவிலும், உலக அளவிலும் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு மாநாடாக அமைந்தது. இது தி.மு.க. வின் வலிமையைக் காட்டுகிறது. இரண்டு ஆண்டுகளில் வரவுள்ள சட்டமன்றத் தேர்தலுக்கான பணிகளை தி.மு.க தொண்டர்கள் இப்போதே முழுவீச்சில் தொடங்கி விட்டனர்.

ஒன்பது கோள்களை இயக்கும் வல்லமை படைத்த சூரியனைப் போல, தமிழ்நாட்டில் ‘உதயசூரியன்’ சின்னம் மெகா கூட்டணியை வழிநடத்திச் செல்லும். வரும் சட்டமன்றத் தேர்தலிலும் தி.மு.க. தலைமையிலான கூட்டணி மாபெரும் வெற்றி பெற்று, கழகத் தலைவர் தளபதி அவர்கள் மீண்டும் தொடர்ந்து இரண்டாவது முறையாக முதலமைச்சர் ஆவது உறுதி. என்பதை இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக் கொண்டு தேர்தல் காலப்பணிகளை சுறுசுறுப்புடன் நாம் பணியாற்றி வெற்றிகனியை கழகத் தலைவர் அருமை அண்ணன் முதலமைச்சர். அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். உங்களுடைய அனைவரின் ஒத்துழைப்பும் கடமையும் ஒருங்கிணைந்து செயலாற்றி வெற்றியைத் தேடித் தாருங்கள், தேடித்தாருங்கள், நமது சின்னம், நமது சின்னம், நமது சின்னம் எதுனா பவர்ன்னா சூரியன் மற்ற கோள்களை இயக்கும் கோள்களாக தான் இருக்கும். என்பதையும் வெற்றிமேல் வெற்றி சூரியனுக்கு மட்டுமே கிடைக்கும்.

இவ்வாறு முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் பேசினார்.

நிகழ்வில் முன்னாள் எம்.பி.க்கள் ஓ.பி.ரவீந்திரநாத், கோபாலகிருஷ்ணன் முன்னாள் எம்.எல்.ஏ. அய்யப்பன், மாவட்ட அவைத்தலைவர் சுப்பையா, தலைமை செயற்குழு உறுப்பினர் சீனிவாசன், மாநில மருத்துவரணி துணைச் செயலாளர் செண்பக விநாயகம், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் முத்துச்செல்வி, மாவட் பொருளாளர் இல.சரவணன் மாவட்ட துணைச் செயலாளர்கள் மனோகரன், ராஜதுரை, புனிதா, பொதுக்குழு உறுப்பினர்கள் பராசக்தி, மாரிசாமி, மகேஸ்வரி ஒன்றிய செயலாளர்கள் பொன். முத்தையா பாண்டியன், கடற்கரை கிறிஸ்டோபர், சேர்மத்துரை, ராஜதுரை, நகர செயலாளர் பிரகாஷ், பேரூர் செயலாளர்கள் மாரிமுத்து, சேது சுப்பிரமணியன் மற்றும் கழகத்தில் இணைந்த ஓ.பி.எஸ். நிர்வாகிகள் சுப்பிரமணியன், ஐ.ஆர்.8. ராஜேந்திரன், சங்கிலி பாண்டியன் சரவணன், கணேசன், பிச்சை பாண்டியன், உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் மேலநீலதநல்லூர் தெற்கு ஒன்றியப் பொறுப்பாளர் பால்ராஜ் நன்றியுரை ஆற்றினார்.

## சமையல் எரிவாயு தட்டுப்பாடு:

# புதுக்கோட்டையில் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் கண்டன உரை!

புதுக்கோட்டை, மார்ச் 19-

தமிழ்நாட்டிற்கு தேவையான வளர்ச்சி திட்டங்களை வழங்காமலும், ஏழை, எளிய மக்களின் அன்றாட வாழ்வை பாதிக்கும் வகையில் சமையல் எரிவாயு தட்டுப்பாட்டை கண்டித்தும், ஒன்றிய பா.ஜ.க. மற்றும் அடிமை அ.தி.மு.க.வையும் கண்டித்து புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் எஸ்.ரகுபதி தலைமையிலும், வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே. செல்லப்பாண்டியன் முன்னிலையிலும், மாநகர பொறுப்பாளர்கள் துணை மேயர் எம்.லியாகத் அலி, வே.ரா ஜேஸ் ஆகியோர் நன்றியுரையிலும் மதச்சார்பற்ற ஜனநாயக கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் புதுக்கோட்டையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் டாக்டர் வை.முத்துராஜா, மேயர் திலகவதி செந்தில், பெ.ராஜேஸ்வரி, அ.ரெத்தினம், என்.சாத்தையா, எம்.எம்.பாலு, ஆ.செல்லத்துரை, மா. மணிவேலன், பழனிவேலு, சேட் (எ) ஷாஜகான், பா.ரெங்கராஜ், கூட்டணி கட்சி தலைவர்கள் பெனட் அந்தோணி ராஜ், எஸ்.கே.கலியமூர்த்தி, சங்கர், அஸ்ரப் அலி, அப்துல் கனி, அப்துல் ஜப்பார், சலாஹுதின், திமுக சார்பில் கவி வேந்தன், சி.அரங்கநாயகம், எம்.வேலுக்சாமி, ராஜசேகர், மணிமொழி மனோகரன், காதர்கனி, சி.மதியழகன், இராம. செல்வராஜ், செ. கணேஷ், டி.அப்புக்காளை, பூங்குடி எம்.சிவா, வெற்றிச் செல்வன், ஆதீஸ்வரன், கனகம்மன் பாபு, டான்சி ராஜேந்திரன், முரளிதரன், மரிய எட்வின், க. செல்லையா, செ.ரமேஷ், பி.கே.வெங்கடேஷ், விஏடிசி ராஜேந்திரன், ராயல் சபா, சுகி (எ) சுகுமாறன், மேட்டுப்பட்டி சின்னத்துரை ஏ.எல்.கணேசன், எல்ஐசி ரமேஷ், அற்புத ஹென்றி, ஹரி, ஆர்.எம்.சத்யா, முத்துக்கருப்பன், கண்மணி சுப்பு, தியாகு மாலையீடு பிரபு, அறிவு, இளங்கோ, அண்ணாத்துரை, ராகவன் ஆதிமூலம், பி.விசு, பாண்டிச்செல்வன் மற்றும் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து கோஷங்கள் எழுப்பப்பட்டன.




தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. வழிகாட்டுதலின்படி சின்னமனூர் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் கண்ணியம்பட்டி சி.முருகேசன் தலைமையில் சின்னமனூர் மேற்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட சங்கராபுரம் பேருந்து நிறுத்தம் அருகில் மதச்சார்பற்ற கூட்டணி கட்சிகளுடன் ஒன்றிய பா.ஜ.க. கூட்டனியைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

# நாமக்கல்லில் ஒன்றிய அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

நாமக்கல், மார்ச் 19–

தமிழ்நாட்டிற்கு திட்டங்கள் வழங்காததும், சமையல் மற்றும் வணிக எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்படுத்தியதையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி சார்பில் நாமக்கல்லில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

நாமக்கல் பி.எஸ்.என்.எல் அலுவலகம் அருகே நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் தலைமை தாங்கி பேசும்போது, ஒன்றிய பா.ஜ.க அரசின் தவறான வெளியுறவுக் கொள்கை மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காததன் விளைவாக நாடு முழுவதும் சமையல் மற்றும் வணிக ரீதியான எரிவாயு சிலிண்டர்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக குற்றம்சாட்டினர். இதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு அவதியுற்று வருவதுடன், சிறு மற்றும் குறு தொழில்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் மத்திய அரசையும் அதன் கூட்டணிக் கட்சிகளையும் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநகராட்சி மேயர் கலாநிதி, துணைமேர் பூபதி, நகர கழகச் செயலாளர்கள் ராணா ஆனந்த், சிவக்குமார், ஒன்றிய கழகச் செயலாளர் பழனிவேல் நாமக்கல் கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் டாக்டர் பி.வி செந்தில் மற்றும் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி மாவட்ட நிர்வாகிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் கிழக்கு மாவட்டம், காங்கேயம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வெள்ளகோவில் தமிழக வெற்றிக் கழக ஒன்றிய இணை செயலாளர் ஹ.மு.செந்தமிழ்ச்செல்வன், கிராம இளைஞர் அணி அமைப்பாளர் சூ.அருண்குமார் உள்பட 20க்கும் மேற்பட்டோர் அக்கட்சியில் இருந்து விலகி கழக துணைப் பொதுச் செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் முன்னிலையில் தி.மு.கழகத்தில் இணைந்தனர். இதில் திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், வெள்ளகோவில் ஒன்றிய கழக செயலாளர் கே.சந்திரசேகரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.